இந்திய சர்க்காரை ஏங்கவைக்கும் இருட்டு இலாபக்காரர்!

பாலுக்குக் காவல் புரிந்து, பூனையையும் தோழமை கொள்ளும் பரிதாபம்!

கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதில் படுதோல்வி!

உள்ளத்தைத் திறந்து காட்டியும், ஊடல் கொண்டு நிற்பதேன்?

வருந்தி யழைக்கிருர் - வழிவகை சொல்கிருர் - சலுகை பல தந்தும் 'ஜாலம்' புரிவதேனே?

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.

MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (14—11—49) ❁ வெளியூர் (15—11—49) [இதழ் 90

'பக்கா' முதலாளித்வப் போட்டி சர்க்காருக்கு முஸ்தீபா?

கள்ளமார்க்கெட் முதலாளிகள் 'இரகசியமாய்' சம்பாதித்து கணக்குக் காட்டாமல் பதுக்கிவைத்திருக்கும் பணம்பற்றிய முழுப் பிரச்னையையும் மீண்டும் புதிதாக முற்றிலும் வேருன கோணத்திலிருந்து பரிசீலனை செய்வதென்று இந்திய சர்க்கார் முடிவுகட்டி விட்டனரென்று தெரிகிறது. இது காரணமாக ஏற்கெனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்த சட்டமும் கைவிடப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. 'இருட்டில்' சம்பாதித்த இரகசிய லாபக்காரர், பணத்தையும் கணக்கையும் கொண்டுவந்து ஒப்புவிக்கும் வகையில் சர்க்காரின் பழைய சட்டம் எத்தகைய தூண்டுதலும் அளித்ததாகத் தோன்றவில்லையாகையால்தான் அதனைக் கைவிடவேண்டி நேர்ந்ததாம்.

இந்திய சர்க்கார் இப்போது வகுத்திருக்கும் புதிய [illegible], இரகசிய லாபக்காரர்கள் தாங்கள் பதுக்கிவைத்திருக்கும் பணத்தை முதலீடு மார்க்கெட்டுகளில் செலுத்துமாறு வற்புறுத்தப்படுவார்களென்றும், அப்படிச்செலுத்துவோரின் பெயர் வெளியில் தெரியப்படுத்தப்படமாட்டாதென்றும் கூறப்படுகிறது. இப்பிரச்னை பற்றிய சட்டங்கள் பற்பல அவ்வப்போது செய்யப்பட்டவை, ஏதேதோ காரணங்களால் தள்ளிவைக்கப்பட்டுவிட்டனவாம்.

சர்க்காருக்கு நியாயமாகச் சேரவேண்டிய வரி வகைகளை ஏமாற்றி, இருட்டில் இரகசிய இலாபம் சம்பாதித்தோருக்கு சலுகையும் தரவேண்டும்; அதேநேரத்தில் அவர்கள் கையில் பதுங்கிக் கிடக்கும் பணத்தை நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சிக்கு மூலதனமாகவும் ஆக்கவேண்டும். 'பாலுக்குங் காவல், பூனைக்குந் தோழன்' என்ற பழமொழிக்கிலக்காகி, இவ்வண்ணம் திண்டாட்ட நிலையில் திணறுகிறுர்கள் சர்க்கார். பணத்தைப் பதுக்கிவைத்திருப்போர் தக்க கணக்கோடு, தாங்களாகவே வந்து ஒப்படைத்துவிட்டால் தண்டனை எதுவுமின்றி சுமுகமாகக் கணக்கைத் தீர்த்துவிடுவோம் என்று சொல்லிப் பார்த்தனர். 'கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும்' இம்முயற்சி படுதோல்வியடைந்தது; கள்ளமார்க்கெட் கழுகுகள் இதனைக் காதுகொடுத்துக் கேட்டதாகக் கூடத் தோன்றவில்லை. இடையில் ஏதேதோ திட்டங்கள் தயாரித்துப் பார்த்தனராம் சர்க்கார். ஒன்றுகூட ஒத்துவரவில்லையாம்! 'வாதத்துக்கானுல் பித்தத்துக்கு ஆகவில்லை; பித்தத்துக்கு ஆனுல் வாதத்துக்கு ஆகவில்லை'. நாட்டு மக்கள் செல்வாக்கு மொத்தத்தையும் இழந்துவிடவுங்கூடாது; முதலாளிகளின் பகைமையையும் சம்பாதித்துக்கொள்ளக்கூடாது! இ[illegible]த் திணறல், திக்குமுக்காடல்களினிடையேதான் மேற்கண்ட திட்டம் உருவாகியிருப்பதாகத் தெரிகிறது.

இருட்டில் சம்பாதித்த இரகசிய இலாபக்காரர்கள் கணக்குக்கூட காட்டவேண்டாம். வைத்திருக்கும் பணத்தை நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு மூலதனமாகக் கொடுத்தால் போதும். இ[illegible]

தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

என்ன ஆச்சரியம்!

தலைச்சேரி ஜில்லாக் கோர்ட் கட்டிடத்தின் மீது சென்ற 9-ந் தேதியன்று கம்யூனிஸ்ட் கொடியொன்று பறந்து கொண்டிருந்ததாம். போலீசார் வந்து அதை அப்புறப்படுத்தி விட்டார்களாம்.

சர்க்கரைப் பஞ்சம் ஏன் வந்தது?

சென்னை மாகாணம் தனது சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறது. இதனால்தான் பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனை விளக்க ஒரு காரணம் வேண்டுமெனில், அண்மையில் சட்டசபையில் உணவு மந்திரி தோழர் ரோசவிக்டோரியா அவர்கள் பேசியிருக்கும் பேச்சுகளைப் பார்த்தால் போதும். சர்க்கரைப் பஞ்சம் ஏற்பட காரணமென்ன? என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதில் கூறுகையில்,

'இம்மாகாணத்திற்கு வேண்டிய சர்க்கரையில் பாதிதான் இங்குள்ள சர்க்கரைத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிறது. பாக்கியை ஐ. நா. பீகார் மாகாணங்களிலிருந்து இறக்குமதி செய்கிறோம்.''

என்று கூறியிருக்கிறுர். அது மட்டுமல்ல; வியாபாரிகளின் பேராசையைத் தடுக்க இந்திய சர்க்காரால் முடியவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறுர்.

ஆதித்திராவிடரை அனுமதிக்க மறுக்கும் தெருக்கள்?

—(0)—

வண்டியோட்டிச் சென்ருல்கூட கீழிறங்க வேண்டுமா?

'சுயராஜ்ய' சட்டசபையில் கேள்விகள்!

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மாவடிக் கிராமத் தெருக்களில் ஆதித்திராவிட மக்கள் மேல்துண்டணிந்து, செருப்புப்போட்டு நடக்க அனுமதிக்கப்படுவதில்லையென்பது உண்மையா? ஆதித்திராவிடர் வண்டியோட்டிவந்தால், அவ்வூர்த் தெருக்களில் வண்டியைவிட்டுக் கீழே இறங்கி, நடந்துதான் ஓட்டிச் செல்லவேண்டுமென்பது உண்மையா? என்று சென்னை சட்டசபையில் கடந்த 11-ந்தேதியன்று தோழர் பி. எஸ். மூர்த்தி [illegible] கேள்விகட்கு மந்திரி தோழர் பரமேஸ்வரன் இல்லையென்று பதில் கூறினர்.

'ஜாதி இந்துக்கள்' எனப்படுவோர் புரியும் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் அவ்வட்டார ஆதித்திராவிடர் மாவட்ட போலீஸ் சூப்பரின்டெண்டெண்டுக்கு 'மகஜர்' விடுத்தது உண்மையா என்று தோழர் மூர்த்தி கேட்டதற்கு, அத்தகைய கொடுமை யொன்றும் இழைக்கப்படவில்லையென்று (கேள்வியொன்றிருக்க, பதில் ஒன்று கூறி) மழுப்பினர்.

இந்திய சர்க்காரின் இரட்டை வாழ்க்கை!

ஏற்றுமதிக்கு இடமுண்டாம்; ஆனல் பஞ்சம்வரக் கூடாதாம்!

ஆலை அரசர்களுக்கு ஆளவந்தார் உபதேசம்

பஞ்சமும் கூடாது; விலையேற்றமும் கூடாது

உள்நாட்டுத்தேவையை உதாசீனம்செய்யாதீர்

[illegible] தொட்டிலையும் ஆட்டுவதுபோல் இந்திய சர்க்கார் இந்திய ஜவுளியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்ய ஏற்பாடுசெய்துவிட்டு, அதே சமயத்தில் இங்கு துணிப் பஞ்சம் ஏற்படாமல் தடைசெய்யப்போவதாகவும் பறை சாற்றுகின்றனர்.

"இப்பொழுது ஏற்றுமதி அதிகரிப்பதால் தேங்கிக்கிடக்கும் ஜவுளிகள் அடுத்த 2 மாதங்களுக்குள் செலவாகிவிடுவது நிச்சயமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா, இங்கிலாந்து உள்பட, வெளிநாடுகளில் இந்திய ஜவுளிகளுக்குக்கிராக்கி அதிகரித்திருக்கிறது. மற்றெல்லா நாட்டு ஜவுளிகளையும் காட்டிலும் இந்திய ஜவுளி மலிவாக இருப்பதே இதற்குக் காரணம். விலை குறைப்பை எதிர்நோக்கியிருக்கும் இந்திய ஜவுளி வியாபாரிகள் கஷ்டத்திலிருந்து தப்புவதற்காக எவ்வளவு ஜவுளியை ஏற்றுமதிசெய்யமுடியுமோ அவ்வளவு ஜவுளியை ஏற்றுமதி செய்ய ஆவல் கொண்டிருக்கின்றனர்."

என்று இந்திய சர்க்கார் ஜவுளிக் கமிஷனர் கூறுகிறுர். ஆனல் அதே சமயத்தில் சர்க்கரைப் பஞ்சம் ஏற்பட்டதுபோல், துணிப் பஞ்சம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று ஆலை அரசர்களுக்கு அறிவுறுத்துகிறுர். உள்நாட்டில் பஞ்சம் ஏற்படும் அளவுக்கு ஜவுளி ஏற்றுமதியை அரசாங்கம் அனுமதிக்காதாம். எப்படி யிருக்கிறது அரசியலார் ஆட்சிமுறை பாருங்கள்!

மக்களுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாத வேண்டப்படும் பொருள்களுள் துணியும் ஒன்று. அப்படிப்பட்ட இன்றியமையாப் பொருளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்ய அனுமதி கொடுத்துவிட்டு, ஆலைஅரசர்களின் ஆசைக்கு அணைபோடவும் பார்க்கிறது அரசாங்கம். "ஏ, முதலாளிமார்களே நாட்டில் துணிப்பஞ்சம் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று உபதேசம் செய்வதால் என்ன பலன் விளையும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். பஞ்சம் என்பது பண்டமே கிடைக்காத நிலை. அந்த நிலை வராமல் பாதுகாக்க வேண்டும் என்கிறது அரசாங்கம். அப்படியானல் பண்டம் கிடைக்கும். ஆனல் விலை மட்டும் அதிகமாக இருக்கும் என்பது இதனல்புலனுகிறது. ஏற்றுமதியின் காரணமாக ஜவுளி விலை ஏறக்கூடும். இந்த விலையேற்றத்தை மட்டும் மக்கள் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? இல்லாமை மட்டுந்தானு இன்னலைத்தரவல்லது? அதிக விலை கொடுத்து ஜவுளி வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அதுவும் துன்பந்தான். இந்நாட்டில் பெரும்பாலோர் ஏழைகள். அப்படிப்பட்ட மக்கள் இந்த ஏற்றுமதியால் பாதிக்கப்படுவோர்கள் என்பது திண்ணம். ஆகவே, அரசியலார் உண்மையிலேயே மக்கள் நலம் கருதுபவர்களாக இருந்தால்,—பணமூட்டைகளின் ஆதரவாளர்கள் அல்ல என்பதுஉண்மையானுல் உள்நாட்டு ஜவுளி தேவை எவ்வளவுஎன்பதை நிர்ணயித்துவிட்டு, எஞ்சியதையே ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறுகிறோம்.

சென்னை மாகாணத்தில் சைகிள் தயாரிப்பு

சென்னை மாகாணத்தில் சைகிள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவ சென்னை சர்க்கார் ரூ. 25 லட்சம் வரை முதலீடு செய்ய சம்மதித்துள்ளனரென்று தொழில் மந்திரி தோழர் பெருமாள்சாமி (ரெட்டியார்) சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

இத் தொழிற்சாலையை முன்னின்று துவக்குபவர்களாகிய தோழர்கள் எம். சி. டி. சிதம்பரம் (செட்டியார்,) வி. தியாகராஜ (முதலியார்) ஆகியோர்முதலில் ரூ. 10 லட்சம் முதலீடு போட்ட பின்னர்தான், சர்க்கார் தனது முதலீட்டையளிக்குமென மந்திரிதெரிவித்தாராம்.

மாலை மணி

சென்னை 14—11—49. திங்கட்கிழமை

நீதி வழி சாய வேண்டும்!

ஆப்பிரிக்காக் கண்டத்தின் நாடுகள் சில, இத்தாலி நாட்டின் பாசிச மூர்க்கன் முசோலினியின் அதிகார ஆதிக்கத்தின் கீழ், அகப்பட்டு, அல்லலுற்று, நலமிழந்து, நலிவு எய்திக் கிடந்தன என்பதை யாவரும் அறிவர். சென்ற உலகப் பெரும் போரின் விளைவாக ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாக, அந்நாடுகளைப் பற்றியிருந்த பாசிசப் பிடி நொறுக்கப்பட்டு, சிதறடிக்கப்பட்டது.

இத்தாலியின் பழைய குடியேற்ற நாடுகளாகிய லிபியா, எரிட்ரியா, இத்தாலிய சோமாலிலாந்து போன்ற நாடுகள், போரின் விளைவாகத் தமக்கு விடுதலை கிடைக்கும் என்று எதிர்பார்த்தன. அப்படி எதிர்பார்ப்பது இயற்கையுந்தானே! வல்லரசுகளின் ஆதிக்கக் கோட்டைகள், போரின் பின் விளைவாக அங்கொன்றும், இங்கொன்றுமாக இடிந்து விழுந்து கொண்டிருப்பதைக் கண்ட இத்தாலியின் குடியேற்ற நாடுகள், தம்மீது கட்டப்பட்டிருக்கும் ஆதிக்கக் கோட்டைகளும் சரிந்து, தாம் விடுதலை பெறுவோம் என்று எண்ணியதில் வியப்பொன்றும் இருக்க முடியாது.

அந்தக் குடியேற்ற நாடுகளின் எதிர்கால நிலையை முடிவு செய்யும் பொறுப்பை ஐ. நா. அரசியல் குழு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஐ. நா. அரசியல் குழுவில் தொடர்பு படுத்திக்கொண்டிருக்கும் உலக நாடுகள் பலவும் முடிவு செய்யும் பொறுப்பில் பங்கு கொண்டிருக்கின்றன.

சென்ற உலகப் பெரும் போரில், இத்தாலி எதிர்க்கட்சியில் இணைந்து நின்றநாடாகும். அந்த இத்தாலி, பழைய குடியேற்ற நாடுகளின் மீது, மீண்டும் ஆதிக்கத்தைச் செலுத்த, துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது. அது துடிப்பதில் கூட அவ்வளவு ஆச்சரியமில்லை; ஆனல் இத்தாலி முன்பு செலுத்திய ஆதிக்கத்தை மீண்டும் அதனிடத்தே 'வாங்கிக்கொடுப்பது' என்ற முறையில்', அமெரிக்காவும், இங்கிலாந்தும் ஐ. நா. வின் அரசியல் குழுவில் பாடுபடுவதைப் பார்க்கும்போதுதான் ஆச்சரியம் அதிகரிக்கிறது. உலகில் தாண்டவமாடும் வல்லரசுகளின் ஆதிக்க வெறியை எந்த விதத்திலும் விரட்டியொழித்துவிடாதவாறு கண்காணித்துக்கொள்வதில் அமெரிக்காவும், இங்கிலாந்தும் அரும்பாடுபடுகின்றன. எனவேதான் போர்க்காலத்தில் நேர் எதிரியாக இருந்துங்கூட, இத்தாலிக்கு எல்லா வகைகளிலும் உதவி செய்ய அமெரிக்கா, பிரிட்டன், பிரெஞ்சு நாடுகள் மிக அக்கறை எடுத்துக் கொண்டு வருகின்றன.

சிரனைகா, டிரிபோலிடானியா, பெஸ்ஸான் ஆகிய மூன்று பகுதிகளையுங்கொண்ட லிபியா நாடு இன்னும் இரண்டாண்டிற்குள் விடுதலைபெற்று விடும் வகையில் ஐ. நா. அவை திட்டங்கள் தீட்டியிருக்கின்றன. 1952 ஜனவரித் திங்களுக்குள் லிபியா சுதந்திர நாடாக வேண்டும்—மூன்று பகுதி மக்களும் அடங்கிய அரசியல் அமைப்பு அவை நிறுவப்பட வேண்டும். ஐ. நா. கமிஷனின் மேற்பார்வையில் அதிகாரமாற்றம் நடைபெற வேண்டும்—என்று நிறைவேற்றப்பட்டிருப்பதானது போற்றப்படக்கூடியது; வரவேற்கத்தக்கது. லிபியாவைப் பொறுத்து ஐ. நா. அரசியல் குழு செய்த முடிவு பாராட்டக் கூடியதாகும்.

ஐ. நா. அரசியல் குழு லிபியாவைப் பொறுத்துக் கையாண்ட அதே முறையை எரிட்ரியா, சோமாலிலாந்து நாடுகளைப் பொறுத்து மேற்கொள்ளாதது வருந்தக் கூடியது; வல்லரசுகளின் வாலாட்டம் நீதி, நேர்மையை இன்னமும் கவனிக்க மறுக்கிறது என்பதைக் காட்டுகிறது.

எரிட்ரியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதை ஒத்திப்போட்டுள்ளது ஐ.நா. அரசியல்குழு. அங்குள்ள மக்களின் எண்ணத்தை அறிந்து அதற்கேற்ற திட்டம்வகுத்துக்கொள்ளலாம் என்பது, சாக்குபோக்குச் சொல்லி உரிமை வேட்கைக் கனலை இன்னும் சிறிது காலம் அணைத்து வைப்பதாகும். இந்த முறை தேவையில்லை; யாரும் விரும்பாதது.

சோமாலிலாந்தைப் பொறுத்த வரையிலும் இன்னும் பத்து ஆண்டுகளுக்கு இத்தாலிய வல்லரசு, அங்கு தர்மகர்த்தா ஆட்சி நடத்த வேண்டும் என்று கூறியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். எதற்காக இத்தாலியின் தர்மகர்த்தாஆட்சி அங்கு நீடிக்க வேண்டும்? அதுவும் பத்து ஆண்டுகளுக்கு ஏதற்காக நீடிக்க வேண்டும்? அப்படி, என்ன, சோமாலிலாந்து மக்கள் தனியாட்சி நடத்தத் தகுதியற்றவர்களா? எதற்காக இந்தத் திட்டம்? ஆதிக்க வெறியைக் கொஞ்ச நாளைக்காவது நிலைக்கச் செய்து வைத்துப்பார்ப்போம் என்பதல்லாமல், வேறு என்ன நேர்மையான காரணங் கொள்ள முடியும்?

குடியேற்ற நாடுகளிலிருக்கும் அதிகார ஆதிக்க பிடிகளை அகற்றி, அந்நாடுகள் அனைத்தையும் சுதந்திரமடையச் செய்வதை விட்டு விட்டு, ஆதிக்க வெறியை இன்னமும் எப்படி எப்படி யெல்லாம் நிலை நிறுத்திக்கொள்ளலாம் என்பதற்காக வல்லரசுகள் பாடுபடுவதும், அதற்கு ஐ. நா. இணங்குவதுமாக இருந்தால், ஐ. நா. அவை இருந்தும் பயனில்லை என்றுதான் கொள்ள வேண்டும். ஐ. நா. அவை வல்லரசுகளோடு வாதாடி நேர்மைக்கும், நீதிக்கும் வழி தேடுவதாக இருக்க வேண்டுமேயொழிய, வல்லரசுகளின் போர்வையாக இருக்கக் கூடாது. ஆனல், பல பொழுதுகளில் வல்லரசுகளின் போர்வையாகத்தான் காட்சியளிக்கிறது! அந்த நிலைமை நீங்குவது எப்பொழுதோ? ஐ. நா. அவை ஆதிக்க வெறி வழி சாயாமல் நீதி வழி சாய வேண்டும்! அதுவே அனைத்துலகும் விரும்புவதாகும்!

ஆந்திரத் தலைவர்களின் அந்தரங்கம் வெளியாகிறது!

மூவர் கமிட்டித் தீர்ப்புக்கு முழு ஆதரவு!

அன்று கசப்பாயிருந்த அறிக்கை இன்று இனிப்பாயிருப்பதேன்?

அனைத்துக்கும் அடிப்படைக் காரணம்...?

“ஜே. வி. பி. கமிட்டியின் தீர்ப்பை ஏற்று ஆந்திர மாகாணப் பிரிவினைக்கு உடன்படுவது என்று சென்னை மந்திரிசபைமுடிவு கட்டிவிட்டது. இந்த முடிவு காங்கிரஸ் செயற்குழுவுக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் அறிவிக்கப்படும்.”

என்று அமைச்சர் பக்தவத்சலனூர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிருர். இம்மாதம் 11-ம் தேதி விஜயவாடாவில் கூடிய ஆந்திர மாகாண காங்கிரஸ் செயற்குழு, மேற்படி அறிக்கையை ஆதரித்திருக்கிறது. அதற்கடுத்த நாள் சென்னை அரசியலாரும் ஜெ. வி. பி. அறிக்கையை ஆதரித்திருக்கின்றனர். இந் நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்திப் பார்க்கின்றபோது ஆந்திரர் கிளர்ச்சி, மூவர் கமிட்டியின் தீர்ப்பு இவற்றின் அந்தரங்கம் வெளியாவதைக் காணலாம்.

சென்னை தமிழருக்கா, ஆந்திரருக்கா என்ற பிரச்னை நெடுநாட்களாக அடிபட்டுவருகிறது. இது பற்றிய விவாதங்கள், அறிக்கைகள் அடிக்கடி பத்திரிகைகளில் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. தமிழரில் ஒருசாரார் இதுபற்றி மூச்சுவிடாமல் பேசிவருகின்றனர், 'சென்னை எங்களுக்குத்தான், சொந்தம்' என்று ஆந்திரர் அடிக்கடி சொல்லுவதும். அதை மறுத்து 'இல்லை, இல்லை' சென்னைத் தமிழருக்குத்தான் சொந்தம் என்று தமிழர் வாதிடுவதும் ஆன நிலைமை நீடித்துக் கொண்டே போய், இன்று சென்னை ஆந்திரருக்கும் சொந்தமல்ல, தமிழருக்கும் சொந்தமல்ல, அது ஒரு தனி மாகாணம் என்று வடவர்கள் தீர்ப்புக் கூற வேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறது.

தமிழ்நாட்டின் எல்லை வடவேங்கடம் தென்குமரி என்பது தெள்ளத் தெளிந்த முடிவு. இதில் சென்னை யாருக்கு என்ற பிரச்னையே எழ இடமில்லாமல் அடிபட்டுப்போகிறது. அப்படியிருக்க ஆந்திரருக்கும் தமிழருக்குமிடையே அகப்பட்டு சென்னை இன்னலுக்கு அல்லற்படக் காரணமென்ன என்பதைச் சற்று ஆராய்ந்து பார்த்தால், எல்லாம் மேலிடத்தார் குறும்புத்தனத்தின் விளைவு என்பது தெள்ளிதிற் புலப்படும் காங்கிரஸ் மேலிடத்தாருக்குத் தெரியும்சென்னை தமிழருக்கே உரித்தான இடம் என்பது. அங்ஙனம் உண்மை தெரிந்த அவர்கள் “சென்னைத் தமிழருக்கே சொந்தம், ஆந்திரர் இதில் உரிமை கொண்டாடுவது ஆதாரமற்ற செயல்” என்று சுருங்கச் சொல்லி விளங்கவைத்திருக்கலாம், உள்ளத் தூய்மை என்பது அவர்களிடமிருந்தால். ஆனல் அவர்கள் செய்தது அதுவல்ல. மூவர் கமிட்டியின் தீர்ப்பு என்ற பெயரில் யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பொருள் கொள்ளும்படியான ஒருவிசித்திர அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டனர். அந்த அறிக்கையை எடுத்துவைத்துக்கொண்டு ஆந்திரர்கள் சென்னை தமக்குச் சேராவிட்டாலும் தமிழருடையதாக ஆகாதிருந்தால் போதும். என்ற அளவிலே திருப்தியடைந்து திருக்கூத்தாடுகின்றனர்

அண்மையில் விஜயவாடாவில் கூடிய ஆந்திர மாகாண காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் பேசிய ஆந்திரத் தலைவர்கள் மூவர் கமிட்டி அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக முடிவு செய்திருக்கின்றனர். இந்த தலைவர்கள்தான் இதற்குமுன் அவ்வறிக்கையைக் கண்டித்து ஏற்க மறுத்தனர். ஆனல் அண்மையில் அந்த மூவர் கமிட்டி அறிக்கை கர்த்தாக்களில் ஒருவரான தோழர் டாக்டர் பட்டாபி சீதாராமையா அவ்வறிக்கைக்கு விளக்கம் தந்த பிறகு, கண்டித்தவர்களே அதனை ஏற்க முன்வந்திருக்கின்றனர், அன்று கசப்பாயிருந்த அறிக்கை பட்டாபியின் விளக்கத்திற்குப் பின் இனிப்பாக இருக்கிறது ஆந்திரத் தோழர்களுக்கு. இது ஏன் என்பதுதான் தமிழர்கள் சிந்திக்க வேண்டிய விஷயம்.

சென்னை தமிழகத்தின் தலைநகராகஇருக்கும்வரையில் இங்கு வடவர் ஆதிக்கம் ஓங்க இடமிராது. எனவே அதனைப் பொதுவிடமாக்கிட ஏதோ ஒரு முயற்சி நடைபெறுகிறது என்று யூகிக்க இடமேற்படுகிறது. பட்டாபியின் பேச்சு, அறிக்கை கருத்தியன இதற்கு இடமளிப்பனவாய் அமைந்துள்ளன. ஆந்திரர் சென்னையைக் கோருவதற்குள்ள காரணங்கள் பல இருப்பினும், "சென்னை தமிழருக்கு இல்லாமற் போனால் போதும் என்ற அளவிலே அவர்கள் திருப்தியுறுவதிலும் இதே கருத்துதான் பொதிந்து கிடக்கக்கூடும்.

விஜயவாடா கூட்டத்தில் மூவர் கமிட்டியின் முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால், எப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது? பட்டாபியின் விளக்கத்திற்குப் பிறகு. இதனை 'ஜே-வி-பி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வார்த்தைகளின் அர்த்தம் இன்னதென்று பட்டாபி விளக்கி விடுத்துள்ள அறிக்கையைக் கமிட்டி ஏற்றுக்கொள்ளுகிறது” என்ற வாக்கியங்கள் தெளிவபடுத்துகின்றன. அது மட்டுமல்ல “சென்னை நகரை ஆந்திர மாகாணத்துடன் சேர்க்குமாறு வற்புறுத்த வேண்டாமென்றுதான் ஜே-வி-பி அறிக்கை கூறுகிறது. சென்னை நகரம் தமிழர்களைச் சேர வேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல."

என்றும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்துபார்க்கையில் சென்னை ஆந்திரருக்கா தமிழருக்கா என்பதல்ல ஆந்திரத் தலைவரின் கவலை. சென்னை தமிழருக்காகக் கூடாது என்பதுதான், அவர்கள் கவலை இந்தக் கவலைக்கு அடிப்படை காரணமாயிருப்பவர் மேலிடத்தார் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

அமைதியே குறிக்கோள்!

பெவின் சோஷலிஸம் வெள்ளாட்டுப் பால்

அமெரிக்கா, ரஷியா ஆகிய இவ்விரு வல்லரசுகளில் ரஷியாதான் உண்மையாக அமைதியில் நாட்டம் செலுத்துகிறது என்பதை நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். அதனை விளக்க மேலும் ஒரு குறிப்பைக் கீழே தருகிறோம்.

அண்மையில் அமெரிக்கா-ரஷியா நேச கவுன்சில் சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியபோது சோவியத் அயல் நாட்டு அமைச்சர் தோழர் விஷன்ஸ்கி,

“உலகம் முழுவதிலும் சமாதானம் நிலவவேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள். சோஷலிஸத்தையே ரஷியா ஆதரிக்கிறது. முதலாளித்வத்தை, அல்ல. ஆனல் அமெரிக்காவின் விவகாரங்களில் தலையிட நாங்கள் விரும்பவில்லை”

என்று பேசியிருக்கிருர். அதே சமயத்தில் சோஷலிசத்துக்கும் முதலாளித்வத்துக்கும் இடைப்பட்ட ஒருவித விசித்திரக்கொள்கையைக்கொண்டிருக்கும் பிரிட்டனையும் கிண்டல் செய்கிருர்.

“பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி பெவின் சோஷலிஸம் வெள்ளாட்டுப்பாலைப்போல் பயனற்றது” என்று கூறியிருக்கிருர்.

மாற்றுக் கட்சியாளரை நசுக்க நினைப்பதுதான் ஜனநாயக ஆட்சியா?

தென்னாட்டை நிரந்தர அடிமையாக்கிக் கொள்ளத் திட்டம் போடுகின்றனர்

வடவர் ஆதிக்கம் நீடிக்கும் வரை வாழ்வு நமக்கேது?

மதுரை மறுமலர்ச்சி மன்றத்தில் தோழர்கள் சொற்பெருக்கு

மதுரை, நவ. 7—

நேற்று மாலை 6-30 மணிக்கு மதுரை கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில், மதுரை கீழ்மாசி வீதி மறுமலர்ச்சி மன்றத்தின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் எஸ் முத்து தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையாகப் பேசும்போது, கடந்த வாரத்தில் மதுரைக்கு வந்திருந்த காங்கிரஸ் தலைவர்களும், அமைச்சர்களும் மக்களுக்குத் தேவையான விஷயங்கள் எதையும் கூறாமல் மாற்றுக் கட்சிகளைத் தாக்குவதையே குறிக்கோளாய்க் கொண்டு சொற்பொழிவாற்றினார்கள் என்றும் அவர்களது சீடர்கள் தி. மு. கழகக் கொடியை இறக்கியது பற்றித் தந்தி மூலம் அறிவித்தும்கூட, அதுபற்றி நடவடிக்கை ஒன்றும் எடுத்துக் கொள்ளாததோடு அதற்காக வருத்தங்கூடத் தெரிவித்துக் கொள்ளவில்லை என்றும் இதுதான் ஜனநாயக ஆட்சியாளர்கள் மாற்றுக் கட்சியினருக்குக் காட்டும் மரியாதை என்றும், இத்தகைய மனப்பான்மை கொண்டவர்கள் ஜனநாயகத்தைப்பற்றி வீணே தம்பட்டமடிப்பது மக்களை ஏமாற்றும் செயலாகும் என்றும் விளக்கமாகப் பேசினார்.

அடுத்து மாணவர் மாணிக்கவாசகம் பேசியபின், நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். அய்யாசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:- சென்னை முதலமைச்சர் மதுரைக் கூட்டத்தில் பேசும்பொழுது "இந்த நாட்டில் பேச்சுரிமை, எழுத்துரிமை பிரசார உரிமை பறிக்கப்படவில்லையென்றும், நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமல் யாரும் தமது கொள்கைகளைப் பிரசாரம் செய்ய உரிமையுண்டு' என்றும் கூறினார். இது உண்மைதானா? அப்படியானால் திராவிட இயக்கப் பிரசாரத்தை ஏன் தடை செய்ய வேண்டும்? பத்திரிகைகளுக்கு ஜாமீன் கேட்பது, புத்தகங்களைத் தடை செய்வது, புத்தகங்கள் எழுதியவர்கள் மீது வழக்குத் தொடருவது, நாடகங்களுக்குத் தடை விதிப்பது போன்ற காரியங்களெல்லாம் பேச்சுரிமை எழுத்துரிமை வழங்கப்பட்டிருப்பதின் அடையாளமா? ஆரிய மாயை என்ற புத்தகம் எழுதியதற்காக அண்ணாவின் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக்கொண்டு? வகுப்புத் துவேஷத்தை மூ[illegible]கிறார் என்பது அர[illegible] குற்றச்சாட்டு. முதலமைச்சரைக் கேட்கிறேன், நாங்கள் மூட்டிய வகுப்புத் துவேஷத்தால் எத்தனை வகுப்புக் கலவரங்கள் நடந்திருக்கின்றன? எந்த இடத்தில், எப்போது நடந்ததென்று புள்ளிவிவரங்காட்ட முடியுமா? திராவிடநாடு பத்திரிகை வகுப்புத் துவேஷத்தை வளர்த்ததென்று 3000 ரூபாய் ஜாமீன் கேட்கப்பட்டது. திராவிட நாடு எழுதியது வகுப்புத் துவேஷமாகாது என்று உயர் நீதி மன்றம் தீர்ப்புக்கூறி விட்டது. காங்கிரஸ் ஆட்சியாளர் வெட்கப்பட வேண்டாமா? வரப்போகும் தேர்தலில் மீண்டும் தாங்களே பதவிக்கு வர வேண்டும் என்று விரும்பியிருந்தால் எங்கள் மீதும், எங்கள் பத்திரிகைகள் மீதும் வகுப்புத்துவேஷம், பலாத்காரம் போன்ற குற்றங்களைச் சாட்டி ஒழித்துவிட நினைப்பதா? நாங்கள் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. காங்கிரஸ்ரே பதவிவகிக்க வேண்டும், எல்லாத்துறைகளிலும் வடநாட்டாரின் ஆதிக்கம் தொடர்ந்து பொறுக்காமல், அவர்களே திராவிட நாடு பிரிவினைகோர வேண்டிய அளவுக்கு மாற்றம் அடைய வேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும். அதற்கான சூழ்நிலையை உண்டாக்குவதற்காக அமைதியான முறையில் பிரச்சாரம் செய்வதே எங்கள் நோக்கமாகும்.

பின்னர் தோழர் என். எஸ் இளங்கோ 2 மணி நேரம் மிக உருக்கமாகப் பேசினார். அவர் பேசும் பொழுது,

காங்கிரசின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பது பற்றி பண்டித நேருவுக்கே சந்தேகம் தோன்றிவிட்டது. அதன் பயனாக ஏற்பட்டதுதான், காமன்வெல்தில் இன்னும் பத்தாண்டுகள் இணைந்திருப்பது என்ற கூட்டுறவு ஏற்பாடு. வெள்ளையர் இந்நாட்டை விட்டு வெளியேறும்போது, இந்தியாவின் பொக்கிஷத்தில் 800 கோடி ரூபாயை வைத்துவிட்டுச் சென்றார்கள். காங்கிரஸ்காரர்கள் ஆட்சி மைனர் விளையாட்டு ஆட்சி முறையால், அதில் 200 கோடியைப் பொசுக்கித் தீர்த்துவிட்டார்கள். இப்போது இந்த நாட்டை அமெரிக்காவின் பொருளாதாரப் பிணைப்பில் சிக்க வைக்கும் முயற்சியில் பண்டித நேரு அமெரிக்கா போயிருக்கிறார். தென்னாட்டைப் பொறுத்த வரையில், இத்தகைய கடன்களுக்கு அவசியமேயில்லை. வடநாட்டினர் பிணைப்பில் தென்னாடு இருப்பதால் வடநாட்டார் வாங்கும் கடன்களுக்கு நாமும் உள்ளாகித் தீர வேண்டிய நிலையிலிருக்கிறோம். தென்னாட்டில் நல்ல வளம் இருந்தும், வருமானம் இருந்தும் அத்தனையும் மத்திய சர்க்காரிடம் கொட்டிக் கொடுத்துவிட்டு, வடநாட்டாரின் கையை எதிர்பார்த்து வாழ்கிறோம். வடநாட்டார் இந்நாட்டை என்றும் தங்கள் பிடியிலேயே வைத்திருக்க எண்ணுகிறார்கள்; இந்நாட்டில் தொழில் வளம் ஏற்படுவதும், ராணுவ தளம் ஏற்படுவதும் தங்களுக்கு ஆபத்து என்று கருதுகிறார்கள் எனவேதான், அதிக வருமானம் தரும் ரெயில்வேக்கள் தென்னிந்திய ரெயில்வேயும், எம் எஸ் எம். ரெயில்வேயும் ஆக இருக்க, கல்கத்தா அருகில் ரெயில் என்ஜின் உற்பத்திச்சாலை கட்டுகிறார்கள். 100 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட ஆவடி ராணுவ தளத்தை வீணாக்கிவிட்டு, மற்றும் ஒரு 100 கோடி கடன் வாங்கி பம்பாய் மாகாணத்தில் ராணுவதளம் புதிதாக அமைக்கத் திட்டமிட்டு வேலை செய்கிறார்கள். அதனால் தென்னாட்டிலிருந்த ராணுவதளம் கையைவிட்டுப் போவதோடு, ஐம்பதாயிரம் தென்னாட்டவருக்கு வேலையும் போகிறது. இதிலிருந்து தென்னாட்டை நிரந்தர அடிமையாக வைத்திருக்க வடநாட்டார் திட்டமிடுகிறார்கள் என்பது நிச்சயமாய்த் தெரிகிறது."

என்றும் மற்றும் பல விஷயங்கள் பற்றியும் நீண்ட விரிவுரை நிகழ்த்தினர். சுமார் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அமைதியுடன் கடைசி வரையிருந்து சொற்பொழிவுகளைக் கேட்டனர். கூட்டத்திற்கு மாணவர்களும், வெளியூர்களிலிருந்து ஏராளமான இயக்கத்தோழர்களும் வந்திருந்தனர். தலைவர் முடிவுரை கூறக் கூட்டம் இரவு 10-மணிக்கு முடிவுற்றது.

திராவிட முன்னேற்ற இளைஞர் படிப்பகம்

விருகம்பாக்கம், அக். 20—

சைதாப்பேட்டை வட்டம், விருகம்பாக்கத்தில் "திராவிட முன்னேற்ற படிப்பகம்" என்னும் ஓர் படிப்பகம் 16-10-49-ல் திறக்கப்பட்டது. கோடம்பாக்கம் தி. மு. க. செயலாளர் தோழர் மு. இளையபெருமாள் பி. ஏ., தலைமையில் படிப்பகத் துவக்க விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், மக்களின் மறுமலர்ச்சிக்குப் பகுத்தறிவே வழியென்றும், அறிவுப் பிரசாரத்தைக் கொண்டதே தி.மு. கழகம் என்றும், அதன் வளர்ச்சிதான் திராவிட மக்களின் முன்னேற்ற வாழ்வு என்றும், உரைத்தார். மேலும் அவர் பேசுகையில், திராவிட மக்கள் எவ்வகையில் வடவர் ஆதிக்கத்திலும், ஆரிய சூழ்ச்சியிலும் பாதிக்கப்பட்டு, பாழான நிலைக்கு ஆளானார்கள் என்றும் கூறி, திராவிட மக்கள் நல்வாழ்வு பெற வேண்டுமானால்—வடநாட்டுப் பிடியிலிருந்து மீள வேண்டுமானால் அதற்கெனப் பாடுபடும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அனைவரும் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பின்பு தோழர் மன்னார் மணி பேசியபின், செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

இந்திய சர்க்காரை...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

படி முதலீடு செய்தால், அவர்கள் பெயரைக்கூட வெளியிட மாட்டோம். எனவே சஞ்சலம், சந்தேகம் சிறிதுமின்றி நாணமும் பயமும் நீங்கி உள்ள பணத்தை முதலீடு செய்யுங்கள் என்ற வகையில் கோரிக்கை விடப்படுகிறது. களாமசர்க்கார் கள்ளமாகக் கேட்கிறார்கட்கு! சர்க்காரின் இக்கோரிக்கையும் எந்த அளவுக்குப் பயன்தருமென்பதைக் காலந்தான் காட்ட வேண்டும்.

கடந்த 12-ந் தேதியன்று கைத்தொழில் ஆய்வுரைக் கவுன்சில் நிரந்தரக் கமிட்டியில சொற்பொழிவாற்றியிருக்கும் உதவிப் பிரதமர் சர்தார் படேலும் உள்ளபடியே இன்றைய சர்க்காரின் மனநிலையைத் திறந்துதான் பேசியிருக்கிறார். தேசிய சர்க்கார் எந்த வகையிலும் முதலாளிகளைத் துன்புறுத்தவோ அவர்களுக்குத் தொல்லை—தொந்தரவு—நஷ்டம் இழைக்கவோ முற்படாதென்று கருத்துப்பட வெளிப்படையாய்க் கூறியுள்ளார்.

பட்டேல் பேசியிருக்கிறார். 'தொழில் முதலாளிகளின் இன்னல் — இடையூறுகளைப் போக்குவதுதான் இன்றைய சர்க்காரின் இலட்சியமும் நோக்கமுமே தவிர, மேலும் மேலும் புதிய தொல்லைகளை அவர்களுக்களிப்பதல்ல'' இந்த அளவுக்கு உலக மக்கள் முன்னிலையில் உறுதி கூறிவிட்டார், 'சுயராஜ்ய' சர்க்காரின் உதவிப் பிரதமர் படேல். இதோடு மட்டுமல்ல. உங்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் விகிதங்களையும் அடுத்தப் 'பட்ஜெட்'டில் குறைத்துவிடுகிறோமென்று வாக்களித்துவிட்டார்.

இந்த அளவுக்கு இன்றைய சர்க்கார் முதலாளிகளமாட்டு தங்களுக்குள்ள பரிவையும் பட்சாதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு அதன் மூலம் தங்களது முதலாளித்துவ மனோபாவத்தையும் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட பிறகும், 'இருட்டடிப்பு' பண முதலாளிகள் மனமிரங்கவில்லையானால், ஒன்று அவர்கள் தேசிய சர்க்காரை நம்பவில்லை, அல்லது இன்றைய சர்க்காரை எல்லாத்துறையிலும் சிறப்பாக, பொருளாதாரத்துறையில — திகழுமுகாட வைத்து, பலமுள்ள 'பக்கா' முதலாளித்துவப் போட்டி சர்க்கார் நிறுவ வசதி செய்கின்றனரென்பதுதானே பொருள்! முதலாளித்துவமே, உன் பெயர்தான் பித்தலாட்டமா?

அவர் காணும் நேரு!

"இந்து மதக்கலாச்சாரத்தில் எவையெவை சிறந்தவை, உயர்ந்தவை-அவையெல்லாம் பண்டித நேருவிடம் குடிகொண்டுள்ளன. அவரும் படேலுமே சுதந்திர 'பாரத'த்தின் இயக்கும் சக்திகளாவர்."

—போபட்கார்

இனி நடப்பவை

சென்னை-சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கலை விழாவை யொட்டி 15-11-49 செவ்வாய் மாலை 4-30 மணிக்கு, டாக்டர் ஆர். கே. சண்முகம் அவர்களால் பரிசளிப்பும், வாழ்த்துரையும் நிகழ்த்தப் பெறும்.

சுயராஜ்யம் நடக்கும் விதம்!

இப்பொழுது நடைபெறும் சுதந்திர ஆட்சி என்கிறார்களே அது எப்படி என்று அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் கொஞ்ச நாட்களுக்குத் தொடர்ந்து நமது சென்னை சட்டசபை நடவடிக்கைகளைக் கவனித்து வந்தாலே போதும் விஷயம் புரிந்துவிடும். சில சமயங்களில் சட்டசபையைப் பார்த்தால் அது சட்டசபைதானா அல்லது பள்ளிக்கூடமா என்ற சந்தேகம் தோன்றிவிடும். பள்ளிக்கூடங்களிலாவது ஓரளவுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு முதலியவை இருக்கும். மக்கள் பிரதிநிதிகள் கூடி மக்களாட்சி நடத்தும் மன்றமாகிய சட்டசபையிலே அதுகூட இல்லை. இதற்கோர் எடுத்துக்காட்டு வேண்டுமென்றால் கடந்த 12-ந் தேதி நடந்த சட்டசபை நிகழ்ச்சிகளே போதுமானவை.

அன்று மந்திரிகள் யாருமே சட்டசபைக்கு வரவில்லை. மந்திரிகள் இல்லாததால் கூட்டத்தை ஒத்திவைத்துவிடலாம் என்று தோழர் எம். ஏ. மஜீத் கூறினார். இதனைத் தொடர்ந்து 'மந்திரிகள் யாருமே இல்லை...' என்று மனங்கசிந்து கேட்டார் மற்றொரு உறுப்பினர்.

உறுப்பினர் சம்மதித்தால் மந்திரிகள் இல்லாமலேயே சபை நடக்கலாம் என்றாராம் சபைத் தலைவர். இதன் பிறகு சற்று நேரம் அமைதி நிலவியது. பின்னர் சிறிது நேரம் கழித்து பிரதமர் வந்தாராம். மந்திரிகள் யாரும் வராதது குறித்து அவர் வருத்தம் தெரிவித்தாராம்.

இவ்வளவும் எப்படிப்பட்ட நாளில் நடைபெற்ற நிகழ்ச்சி தெரியுமா! ஜீவாதாரப் பிரச்சினை என்று பேசப்படும் உணவுப் பிரச்னை பற்றிய விவாதம் நடைபெற இருந்த நாளில் நடைபெற்றதாம்! அன்று [illegible] கழித்து வந்தவர்களில் உணவு மந்திரியாரும் ஒருவராம்! இதுதான் சுயராஜ்யம் நடக்கும் விதம்!

காஷ்மீரில் பாகிஸ்தா[illegible] பற்றி நேரு

லண்டனில் பத்திரிகை நிருபர்கள் சுமார் [illegible] கொண்ட [illegible] இந்தியப் பிரதமர் பண்டித நேரு [illegible] காஷ்மீரில் [illegible] அநியாயமாகப் புகுந்து ஆக்கிரமிப்பு புரிய விரும்புவது பாகிஸ்தானேயாகுமென்று [illegible] காஷ்மீரின் சட்டபூர்வமான [illegible] அரசாங்க [illegible] இந்தியா [illegible] வலனுக்குச் சென்றது [illegible] விட்டார்.

ஒரு [illegible] கொள்ளைக்கார[illegible] மக்களின் தோழன் என்று [illegible] பண்டித நேரு.

[illegible]தரியாத விஷயம்; புரியாத நிலை; [illegible]வண்டாத நேரம்; குறும்பான கூற்று!

வரலாற்றை மறந்து வம்பு பேசும் மந்திரியார்!

காலட்சேபம் கேட்டவர் கம்பரை முழுதுமுணர்ந்தவரா ?

"நான் ஒரு மலையாளியாகி[illegible]ந்தும், எனக்கு இம் மாநாட்டைத் திறந்து வைக்கும்பேற்றை அளித்ததற்கு மகிழ்கிறேன். எனது இளமைக் காலங்களில் கம்பராமாயண காலட்சேபங்களைக் கேட்டிருக்கிறேன். சிறையிலிருக்கும்போது, அக்காவியத்தின் அழகைப் பாராட்ட ஆரம்பித்தேன். எனினும் வ[illegible] ராமாயணம் ப[illegible]திருக்கிறேன்; [illegible] அதுகொண்டு தமிழ்க்காவியத்தின் அழகை என்னுல் உணர முடிந்தது" என்று 12-ந் தேதி சென்னையில் நடைபெற்ற கம்பர் மாநாட்டைத் திறந்து வைத்த, கல்வி மந்திரி தோழர் மாதவ மேனன் குறிப்பிட்டிருக்கிறார். கல்வி மந்திரி என்ற பொறுப்பை [illegible] எது தவிர வேறொரு [illegible]பாவமும்' செய்தறியாத நம் [illegible] மந்திரியை மநாட்டைத் திறப்பு விழாவுக்கு அழைத்த அவ[illegible]ளவு தவறென்பதை [illegible] குறிப்பாகக் கூறிவிட்டிருக்கிறார். நான் கம்பராமாயணத்தைப் படித்ததே இல்லை. ஏதோ சத்தரா[illegible] காலட்சேபங்கள் கேட்டிருக்கிறேன் [illegible]த்தை இரண்டொருவர் கூறக் கேட்டிருக்கிறேன். எனக்கா இந்தப் பொறுப்பு!' என்று வியப்புற்ற நிலையில் [illegible]யிருக்கிறார், தோழர் மாதவ மேனன். கல்வி மந்திரியென்ற 'மகுடம்' தாங்கி நின்ற ஒரே காரணமே அவரை அழைக்க அடிப்படையாயிருந்ததென்றால், மாநாட்டாரை மன்னித்துவிட வேண்டியதான் மந்திரியார்!

கம்பராமாயணத்தைக் [illegible]ண்டறியேன என்று சொல்லிய [illegible]ற்கேறப மந்திரியார் தனது [illegible]பச்சை, தெரிந்ததைக்கொண்டு [illegible]தாவது கூறிமுடித்துக்கொண்டிருக்கவேண்டும். அதுதான் முறை; மாநாட்டாருக்கும் அவர் செய்ய வேண்டிய கடப்பாடும் அது தான்!

கம்பனைக் காவியகர்த்தா [illegible]ரென்றார்; சரி. கம்பர் எல்லாந் தெரிந்தபல்கலைப் பண்டிதர் [illegible]ன்றார்; ஏற்றுக் கொள்வோம். [illegible]பா ஷேக்ஸ்பியருக்கும் வால்[illegible]க்கும் ஒப்பானவர் என்றார்; [illegible]ருக்கட்டும். இது தெரிந்தோர், [illegible]யாதோர், படித்தோர்படியா[illegible]தோர் எல்லோரும் சொல்வது. [illegible]தாரும் சொன்னார். மந்[illegible]ரும்!

[illegible]ஆகவே, மகா ஜனங்களே, [illegible]வளவு அவேஷ்டமான மகா [illegible] கம்பர் மகா நாட்டை உங்[illegible] [illegible]மூகனதாக[illegible] திறந்துவைக்[illegible]ன", என்று கூறி முடித்தி[illegible]ருக்கவேண்டும் அமைச[illegible] மாநாட்டாரும் அவ்வளவு [illegible] எதிர்பார்த்திருப்பர். கம்பராமாயணத்தைப் புரட்டிப [illegible]ாத . ஒரு வர்டமிருந்து [illegible]ருமேல் வேறு எதைத் [illegible] [illegible] தான் எதிர் [illegible]முடியும்? ஆனால் அமைச்[illegible]லை அமைச்சர்! [illegible] [illegible]லையே, எதற்காகவோ தனக்[illegible]கும் அர்த்தமற்ற ஆத்திரத் [illegible] [illegible]கொட்டித் தீர் [illegible] [illegible]ன்னுகம்பனைக் கருவியாகக் கொள்ள நினைந்தார். அநுதாபத்துக்குரிய 'கம்பர்' அமைச்சர் பிடியில் சிக்கினர்!

"கம்ப இராமாயணம் ஜாதி வேறுபாடுகளை (வர்ணஸ்ரமம்) கற்பிக்கிறதென்று சிலர் தவறாகக் கருதுகிறார்கள். கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமென்றும் கூறுகிறார்கள். காவியம் எழுதப்பட்டுள்ள தாளைத்தான் அவர்கள் கொளுத்த முடியும்; மக்கள் உள்ளத்தில் கம்பர் பதித்தகொள்கைகோட்பாடுகளை கொளுத்தி விட முடியாது" என்று வீராவேசத்துடன் பேசியிருக்கிறார், தோழர் மாதவ மேனன். தெரியாத விஷயத்தைப் பற்றி புரியாத நிலையில், வேண்டாத நேரத்தில் வீம்பாகப்பேசுவோரைப்பற்றி நமக்குக் கவலையில்லையெனினும், பொறுப்புள்ள பதவியிலிருப்பவர் பொறுப்புடன்—விஷய ஞானத்துடன்—பேச வேண்டியவர் பொய்யாகப் பல கூறினல், பொது மக்கள் சார்பில் அதற்கு விளக்கம் கோர நாம் கடமைப் பட்டுள்ளோம்.

'மணிலாக்கொட்டைக்குவேர்க்கடலை' யென்றவொரு பெயரிருப்பதை மறந்து - அல்லது தெரியாது, விளை நிலத்திலுள்ள வேர்க்கடலைச் செடியில் கொட்டை எங்கு இருக்குமென்ற சாதாரண விஷயமும் தெரிந்து கொள்ளாது, ஆனால் அதே நேரத்தில் கொட்டை பூமிக்கு மேல செடியில் விளைந்திருக்குமெனத் தவறாகக்கருதிக் கொண்டு, வேர்க்கடலை வயலில் விளைச்சலைக் காணோம் என்று கூறுபவர் எவ்வளவு பொது அறிவு மிக்கவராகக் கருதப்படுவார்! கம்பராமாயணத்தைத் திறந்து பார்க்காமலேயே, அதில் ஜாதி வேறுபாடு கற்பிக்கப்படவில்லையென்று கூறுபவர்க்கும் மேற்கண்டவருக்கும் ஏதாவது வேறுபாடு இருக்கமுடியுமா ?

ஆரிய—திராவிடப் போராட்டத்தைச் சித்தரிப்பதே இராமாயணக் கதை என்று நாம் மட்டும் கூறவில்லை; பண்டித நேரு வ[illegible] கூறியிருக்கிறார். வடவர்கள் தென்னாட்டில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள செய்துவந்த போராட்டங்களின் தொகுப்பே ராமாயணம் என்று நாம் கூறவில்லை; வரலாற்று நூலாசிரியர்களே கூறுகின்றனர். திராவிட நாகரிகத்தைச் சிதைத்து, அதனிடத்தில் ஆரிய நாகரிகத்தைப் புகுத்தி, எளிதில் தென்னாட்டைக் கைவசப்படுத்திக் கொள்ளலாமென்ற ஆரிய மக்களின்முயற்சிஎவ்வளவுதூரம் வெற்றிபெற்றது என்பதைக் காட்டுவதே ராமாயணம் என்று நாம் கூறவில்லை; இலக்கிய உணர்வு மிக்க ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். தென்னாட்டு மக்களை (தங்கள் பகைவர்களை) இழித்துக் கூறவேண்டுமென்ற ஆரியர்கள், திராவிடர்களை தஸ்யூக்கள் என்றும், அசுரர் என்றும், ராக்ஷசர் என்றும் அழைத்து வந்தனரென்று நாம் கூறவில்லை, வேத—மனு—தர்மங்கள் மட்டும் கூறவில்லை, ஆராய்ச்சியாளர்கள் மட்டும் கூறவில்லை; கம்பரே தனது ராமாயணத்தில் கூறுகிறார். ஆரிய மன்னன் ராமனைத் தேவனென்றும், கடவுளென்றும், அதே நேரத்தில் திராவிட மன்னன் இராவணனை அசுரன் என்றும் அரக்கன் என்றும். பிராமண-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர் என்ற வர்ணஸ்ரமக்கொள்கையை தனது காவியத்தில் தக்க இடங்களிலெல்லாம் சரியான முறையில் புகுத்தத் தவறினரில்லை கம்பர். பிராமணனுக்கொரு நீதி, சூத்திரனுக்கொரு நீதி தானென்பதை யேற்றுக்கொண்டு 'பட்டவர்த்தனமாக'ப் பிரயோகப்படுத்தியுள்ளார் கம்பர் பற்பல இடங்களில் மந்திரி மாதவ மேனனை ஒரு முறை தக்க ஆசிரியர் உதவி கொண்டு கம்பராமாயணத்தைப்படிக்க முயற்சிப்பாரானல் இவையெல்லாம் புரியாது போகமார்க்கமில்லை-'சூத்திரன் தவஞ்செய்த்தால் தான், அந்த அளவுக்குஅவன் ஆத்மீகத்துறையில் முன்னேறிவிட்டால்தான், பிராமணன் வீட்டுக்குழந்தை இறந்து விட்டது' என்ற கருத்தை—கொள்கையைப் பரப்புவதே ராமாயணம் 'சூத்திரன் வளர்ச்சி பிராமணனுக்கு ஆபத்து' என்ற தத்துவத்தை அடிப்படையாக வைத்து அந்நிலையேற்படாமல், தடுக்கும் முயற்சியில் தோன்றியதுதான் ராமாயணகதை. இவ்விஷயமுணர்ந்தோர் யாரே மறுக்க முடியும்? சிலப்பதிகாரம், சிந்தாமணி-மணிமேகலை போன்ற அரும்பெருங் காவியங்களிருக்கவும், கம்பராமாயணம் மட்டும் காலட்சேபத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறதென்றால், அந்த ஒரு காரணமட்டும் போதுமே, கம்பராமாயணத்தில் காவியச்சுவை மட்டுமின்றி, கடவுட்சுவையும், மதச்சுவையும், வர்ணஸ்ரமச் சுவையும் இன்னும் பிற சுரண்டல் சுவைகளும் அளவுகடந்து மலிந்து கிடக்கிற தென்பதற்கு. மாற்றுக் கொள்கையினரைக் குறைகூற, கண்டிக்க, (அதிகாரமிருப்பதால்) தண்டிக்கவும் கூட மந்திரி மாதவமேனனுக்கு உரிமையுண்டு; ஆனால் தெரியாத விஷயங்களைப்பற்றித் தாறுமாறாகப்பேசி, கருத்தில் வேறுபட்டோரைக் கண்டிக்க வருவது பொருத்தமும் முறையுமன்று; அது அருவருக்கத் தக்கது மாத்திரம்.

கட்டுப்பாடுகளைக் களையவேண்டுமாம்!

சட்டசபையில் சலசலப்பு !

—: (0) :—

கட்டுப்பாட்டை நீக்கிக் கண்ட பலன் என்ன ?

அண்மையில் சென்னை சட்டசபையில்உணவுப்பொருள் போன்ற இன்றியமையாத பொருள்கள் மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதை நீக்கும் மசோதா பற்றிய விவாதம் நடைபெற்றது. அப்போது பல உறுப்பினர்கள் உணவுக் கட்டுப்பாடுகளை ஒழித்துவிட வேண்டுமென்று யோசனை கூறியுள்ளனர்.

கட்டுப்பாடுகள் ஒழிய வேண்டும் என்பதை இங்ஙனம் பலரும் வரவேற்பதில் ஆச்சர்யமில்லை. பொதுவாகக் கட்டுப்பாடுகளை மக்கள் விரும்ப மாட்டார்கள். நாமும் கட்டுப்பாடுகள் இருப்பதை விரும்பவில்லை. ஆனால், கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு முன் அதன் விளைவுகள் என்னகும் என்பதைத் தீர ஆலோசித்துப் பார்க்க வேண்டும். கட்டுப்பாடுகளைநீக்குவதால் நன்மை விளையாமற் போனாலும் பாதகமில்லை. சிறை வெட்டப் பூதம் புறப்பட்ட கதை போல், கட்டுப்பாடு நீக்கத்தால் எதிர்பார்க்கும் நன்மையை விட தீமையே அதிகரித்துவிட்டால் என்ன செய்வது?

ஆகவே கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு முன், கட்டுப்பாடுகள் ஏற்படக் காரணம் என்ன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அப்படி எண்ணிப்பார்த்து அந்த அடிப்படைக்காரணங்கள் இன்றுஅகன்று விட்டனவா என்பதையும் கவனிக்க வேண்டும். போருக்குப்பின் வியாபாரிகளின் பேராசை மேலும் மேலும் வளர ஆரம்பித்தது. அதனல் பண்டங்களின் விலையைக் கண்டபடி ஏற்றிவிட்டனர். பணம் படைத்தோரைத் தவிர மற்றவர் வாழ வழியில்லை என்ற நிலை ஏற்பட்டது. ஏழைகள்என்செய்வதென்று ஏங்க ஆரம்பித்தனர். நிலைமை இவ்வளவு மோசமான பிறகே அரசியலார் தலையிட்டு, கட்டுப்பாடுகளை அமுலுக்குக் கொண்டு வந்தனர். இதன் பிறகே ஒருவாறு கொந்தளிப்பு அடங்க ஆரம்பித்தது. பணக்காரராயினும் சரி, ஏழையாயினும் சரி அவரவருக்குரிய அளவு பொருள்கள் கிடைக்கின்றன என்ற நிலைமை ஏற்பட்டது. அன்று முதல் இன்று வரை ஏதோ ஒரு வகையில் இல்லாமை சமாளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் சட்டசபை உறுப்பினர் பலர் விரும்புவது போல் கட்டுப்பாடு நீக்கப்படுமானல் இதே நிலைமை நீடிக்குமா? அன்று கட்டுப்பாடு இல்லாமலிருந்தபோது வியாபாரிகளிடம் குடிகொண்டிருந்த பேராசை மீண்டும் வெளிப்படாமலிருக்கும் என்று எப்படி நம்ப முடியும் ?

முன்பு சர்க்கரைக் கட்டுப்பாடு இருந்ததை வாசகர்கள் அறிவர். அப்பொழுது அளவில் குறைந்திருந்தாலும் சர்க்கரை கிடைப்பது நிச்சயமாக இருந்தது. பின்னர் சர்க்கரை கட்டுப்பாடு நீக்கியபின் கொஞ்ச காலம் எல்லோருக்கும் சர்க்கரை கிடைப்பதுபோல்காணப்பட்டது. ஆயினும் நாளடைவில் என்ன பலனைக் கண்டோம்? இன்று சர்க்கரைக்கு மக்கள் அலாய்ப் பறக்கின்றனர். அரசியலாரை இதற்குக் காரணம் கேட்டால் முதலாளிகள் மீது குற்றம் சாட்டுகின்றனர். முதலாளிகள்சர்க்கரையைப் பதுக்கி விட்டனர் என்கின்றனர். இந்த நிலைமாற,மீண்டும் சர்க்கரைக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டு வர முயல்கின்றனர். கட்டுப்பாடு கூடாது என்று அதற்கு வழியனுப்பு உபசாரம் செய்த சர்க்கார், இன்று அதற்கு வரவேற்பு வழங்குகின்றனர். எப்படி ஏற்பட்டது இப்படிப்பட்ட நிலை? இவற்றையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கட்டுப்பாடில்லாவிட்டால் நன்மை விளையும் என்று நம்புகிறவர்கள் சர்க்கரைக்கு நேர்ந்திருக்கும் நிலைமையை நினைத்துப் பார்க்க வேண்டும்.

எனவே, கட்டுப்பாடு தீமை பயப்பது என்று மட்டும் பேசுவதில் பயனில்லை. கட்டுப்பாடு ஏற்படக் காரணம் என்ன? அந்தக் காரணம் அகன்றுவிட்டதா இன்று என்பவைகளை நடுநிலை நின்று ஆராய்ந்து பார்த்து அதன் பிறகே உணவுப்பொருள்கள் மீதிருக்கும் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும். இதை விடுத்து அவசரப்பட்டு காரியங்களைச் செய்தால் நிலைமை மேலும் மோசமாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மனித உரிமைக்கு மதிப்பு

'இன, மத, தேச வேற்றுமைகள் காரணமாக யு. எஸ். ஸில் மக்களிடையே ஓரளவு பார பட்சமும், அநீதியும் காட்டப்படுவது உண்மைதான். இந்த அநீதியையும் பார பட்சத்தையும் ஒழிக்கவே நாங்கள் பாடுபடுகிறோம். இதற்காக,சிவில் உரிமைச்சட்டங்களை நிறைவேற்றுவது அவசியம்" என்று

அண்மையில் அமெரிக்கத் தலைவர் தோழர் ட்ருமன் அறிவித்திருக்கிறார். இதிலிருந்து இனி அமெரிக்காவில் நீகரோக்களுக்குச் சிவில் உரிமை கிடைக்க வழியுண்டு என நம்பப்படுகிறது.

இலங்கை மந்திரியின் திடீர் சீற்றம்!

பட்டேலை 'பாஸிஸ்ட் ஹிட்லருக்கு' ஒப்பிடுகிறார்!

இந்திய சர்க்கார் விளக்கம் கோருகிறது

'சர்தார் பட்டேலும் அவரது கூட்டமும், குற்றமற்ற, அமைதி விழையும் ஐதாராபாத் மக்கள் மீது புரிந்த காட்டுமிராண்டித்தனமான அட்டூழியங்கள் 'பிரபல பாசிஸ்ட்... ஹிட்லர் செய்தவற்றையும் விஞ்சிவிட்டன' என்பதாக இலங்கை மந்திரி சர் ஜான்கோட்டலவாலா கெய்ரோவில் குறிப்பிட்டிருப்பது பற்றி இந்திய சர்க்கார் இலங்கைச் சர்க்காரை விளக்கம் கேட்டிருக்கிறார்களாம்.

இலங்கையில் இந்திய ஹை கமிஷனர் தோழர் வி. வி. கிரி மூலம் 11-ந் தேதியன்று இலங்கை சர்க்காருக்குக் குறிப்பு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இலங்கை சுதந்திர நாடாகுமென்றும் எனவே அது இதர நாட்டுடன் இணைந்து நிற்கவேண்டிய அவசியமொன்றுமில்லை என்றும், அப்படி அவசியமேற்படினும் இலங்கை இந்தியாவைக் காட்டிலும் பாக்கிஸ்தானையே பெரிதும் விரும்புமென்றும் சர்ஜான்கோட்டலவாலா மேலும் பேசியிருக்கிறார்[illegible]

மக்கள் சிந்தித்துச் செயலாற்ற முன்வரவேண்டும்

உழைப்புக்கு உரிய மதிப்பு தருவோம்

கடம்பூரில் எம். எஸ். இராமசாமி

கடம்பூர், நவ. 7—

6-11-49 மாலை 6 மணிக்கு ஊர்வலத்துக்குப்பின, நாடார் மகளமக் கட்டிடத்திற்கு முன்னுள்ள சதுக்கத்தில் துவக்க விழாக் கூட்டம் கூடிற்று. கூட்டத்திற்கு ஆயிரக் கணக்கான மக்கள் வந்திருந்தனர். தோழர் எம். எஸ். பொன்னுச்சாமி அவர்கள் முன்மொழிய தோழர் ப. தில்லை அவர்கள் வழிமொழிய, கூடியிருந்த பொது மக்களின் ஆர்வமிக்க கைதட்டலுக்கிடையே தலைவர் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர்கள், கோவில்பட்டி செ. அருணாசலம், அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி ஆகியோர்கள் கழகக் கொள்கைகளைப்பற்றி விளக்கிப் பேசினர். அவற்றின் சாரம:—

ஈ. வே. அ. வள்ளிமுத்து

தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து தமது தலைமை உரையில், பெரியார் அவர்களின் கொள்கைக்கு முரணான பொருந்தாமணத்தால் வெறுப்படைந்த தோழர்கள் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி, திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்த வரலாற்றை விளக்கிக் கூறினார்.

செ. அருணாசலம்

பின்னர், பேசிய தோழர் செ அருணாசலம் அவர்கள்; நம் நாட்டில் பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பட வேண்டியது அவசியமா? என்று கேட்கலாம். ஆம், அவசியந்தான். ஏனென்றால், திராவிட நாட்டுக்காக—திராவிட மக்களுக்காக—பாடுபட எந்தக் கட்சியும் இல்லை. திராவிட மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இழிவை ஒழிக்க எந்தக் கழகமும் முயலவில்லை. என்பவைகளை விளக்கியதுடன் திராவிடம் தனி நாடாகப் பாடுபட எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில், சேர வேண்டுமென்று பேசி முடித்தார்.

எம். எஸ். இராமசாமி

கடைசியாகப் பேசிய தோழர் அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி அவர்கள் பேசியதாவது :—

திராவிடப் பெருங்குடி மக்களே! பெரியார் அவர்கள் பொருந்தா மணத்தின் விளைவால் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டோம். திராவிடர் கழகத்தைவிட்டு வெளியேறினோம். இரண்டு கழகத்திற்கும் கொள்கையில் வித்தியாசமில்லை. அதுவே கொடியிலும், பெயரிலுமே சிறிது வித்தியாசமுண்டு. ஏனென்றால், மக்கள் நம்மைப் பிரித்துணரும் அடையாளமாகத்தான்!

நாம் யார்...?

தெற்கே கன்னியாகுமரி முனையையும், வடக்கே இமமலையையும், கிழக்கே அஸ்ஸாம் குன்றுகளையும், மேற்கே சுலைமான் மலைகளையும் எல்லையாக உடைய இப்பரந்த உபகண்டத்தில் வரலாற்றுக்கெட்டாத காலத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்துவரும் பழங்குடி மக்களாகிய நாம், நம்மை யாரென்று உணர்ந்து கொள்ளாத பாமரர்களாய் இருக்கிறோம். நம்மை இந்த நிலைமைக்கு ஆளாக்கி வைத்து விட்டனர் ஆதிக்க வகுப்பினர்.

இமயத்தில் இலச்சினை பொறித்துக் கடாரத்தைக் கைவசப்படுத்தி, சிங்களத்தில் திறை கொண்டு, வாள்முனையில் உயிரைப் பணயம் வைத்து, வெளி நாட்டுப்படுகளத்தில், திராவிடமறவர் தம குருதிசிந்தித் தலைகள் உருளப் போராடித் தேடிக்கொணர்ந்த செல்வங்களையெல்லாம், கோவில்கட்டியும், அக்கிரகாரம் ஏற்படுத்தியும் சத்திரங்கள் கட்டியும் ஆரியத்தின் வாழ்வுக்குச் சந்ததி பரம்பரையாக வளந்தேடி வைத்தார்கள் இந்நாட்டு மூவேந்தர்கள்! இவ்வாறு சமுதாயத்திலே கிடைத்த தலைமைப் பதவியும், வற்றாத வளங்கொழிக்கும் நிவந்தங்களும், இன்றுவரை ஆரியத்தை வளர்த்து வருகின்றன.

நீங்கள் கேட்டிருப்பீர்கள் முன்னாள் பிரதமர் ஓ பி. இராமசாமி (ரெட்டி)யாரவர்கள் இந்நாட்டு விளை நிலங்களில் மூன்றுக்கு ஒன்று கோவில்களுக்கும், சத்திரம் மடம் முதலியவற்றிற்கும் சொந்தமாக இருக்கின்றன'' என்று சொன்னதை.

ஒரு நாட்டின், விளை நிலங்களில் மூன்றில் ஒரு பாகம் வீணர்களை வளர்ப்பதற்காக விடப்பட்டிருக்குமானால் அந்த நாடு உருப்படுமா? என்று சிந்தித்துப்பாருங்கள். இவ்வாறு, ஆரியத்தின் வாழ்வுக்காக நாம் உயிருடன் வைக்கப் பட்டிருக்கிறோம்.

இவற்றிற்செல்லாம் கைம்மாறாக ஆரியம் நமக்குத் தந்தது என்ன? நமக்கு இழிபக்கம—சூத்திரர்கள் என்ற பட்டம் கொடுத்தது! நாட்டுக்குரிய நம்மைப் பாமரனாக்கிப் பட்டினிசாசாக்கி வைத்தது! நாம் உழைத்துவிட்டு வியர்வை துடைக்கிறோம்—ஆரியம் உண்டுவிட்டு வியர்வையைத் துடைக்கிறது! இவைதான் நாம் கண்ட பலன்! இவைகளை நாம் பெருமை என்றும் நினைக்கின்றோம். சமுதாயத்தில் நமக்கிருக்கும் அடிமைத் தனத்தைப் 'பெறுதற்கரிய சௌரவம்' என்று எண்ணும் அளவுக்கு நாம் பாமரராகப் பட்டிருக்கிறோம்!

இனி அரசாங்கத்தில் நமக்கிருக்கும் நிலைமை என்ன? சமுதாயத்தில் எப்படி எதிரிகளை உயர்த்தி உயர்த்தித்தாழ்வை வாழ்வென்று கருதி இருக்கிறோமோ, அது போலவே அரசியலிலும் இருக்கிறோம். அரசாங்கத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் என்ன? அரசாங்கத்தில் நமக்குள்ள உரிமைகள் என்ன? என்பது நமக்குத்தெரியாது.

'காந்தியார் நல்லவர். காங்கிரஸ் பெரிய ஸ்தாபனம். இந்திய மக்கள் பூராவும் அதில் சேர்ந்திருக்கிறார்கள். அதுதான் உங்களுக்கு நன்மை செய்ய முடியும். ஆகையால் யாருடைய பேச்சையும் நம்பாதீர்கள்' என்று காமராஜர் போன்றவர்கள் சொன்னால், அவற்றை உண்மையென்று நம்பி அவர்கள் ஆட்டிவைத்த படியெல்லாம் ஆடிக்கொண்டிருக்கிறோம்!

ஏதாவது ஒரு சாமான் வாங்கக் கடை வீதிக்குப்போனால், நான்கு, மூன்று கடைகளுக்குப்போய் சரக்கின் தரம், விலை மலிவு ஆகியவற்றைத் தெரிந்து வாங்குகிறோம் எதற்காக? கடைக்காரர்களால் ஏமாற்றப்படாமல் இருக்கத்தானே? அதுபோலவே, அரசியல் விஷயங்களையும் எல்லாக் கட்சியாரிடத்திலும் கேட்டுக்கொண்டு, எதில் உண்மையும் அனுகூலமும் இருக்கிறதென்று முடிவு கட்டிக்கொண்டு ஒன்றில் இறங்க வேண்டும்.

இப்போது நாம் அப்படியா அலசிப் பார்க்கிறோம்? இல்லவே இல்லை! பண்டித ஜவகர் டணக்காரர். அப்படியிருந்தும் நாட்டுக்காக உழைக்கிறார். அந்தத் தியாகியுடைய ஆட்சி குறையுடையதாகவா இருக்கும்? என்று யாராவது சொன்னால், அதை அப்படியே நம்பிக்கொண்டு பின்பற்றுகிறோம்! இந்த மனப்பான்மை மாற வேண்டும். சிந்தனைக்கு முக்கியம் தர வேண்டும். சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

"சுயராஜ்யம் வந்து விட்டது! மஞ்சட் பெட்டியில் 'ஓட்' போடுங்கள்! துன்பம் தீர்ந்து போகும்." என்றால் நம்புகிறோமே!

உண்மையில் இப்போது நம்முடைய ராஜ்யமா நடக்கிறது? வட இந்திய ஏகாதிபத்திய அரசாட்சியல்லவா நடக்கிறது! திராவிடத்தை வடநாட்டுக்கு ஈடு வைத்து சுயநலத்தைப் பெருக்கும் எத்தர்களுக்கு சுயராஜ்யம் வந்துவிட்டது. இந்த நாட்டுக்கே வந்ததாக ஆகவில்லை. சுயராஜ்யம் வந்து என்ன சுகம் கண்டோம்! வெள்ளைக்காரன் ராஜ்யத்தில் 12 அவுன்சு அரிசி கிடைத்ததென்றால், இவர்கள் ராஜ்யத்தில் 6 அவுன்சு! வெள்ளைக்காரன் காலத்தில் 60 கோடி ரூபாய் இராணுவச் செலவு என்றால், இவர்கள் காலத்தில் 260 கோடி! வெள்ளையர் காலத்தில் மாகாண சுயாட்சி இருந்தது. இப்போது வட இந்திய ஏகாதிபத்தியமாகிவிட்டது. இதற்குப் பேர் சுயராஜ்யமா? எங்கு பார்த்தாலும் வேலை இல்லை, கூலி இல்லை, சோறில்லை, வாழ்வகையில்லை என்கிற தரித்திரக் கூச்சல்தானே கேட்கிறது? இந்த நிலைமையை மாற்ற என்ன செய்யலாம்? வட இந்திய ஏகாதிபத்தியதொடர்பை அறுப்பதை விட வேறு வழி ஏதாவது உண்டா? எனவே, திராவிடம் தனியாக வேண்டும் என்கிறோம்.'

என்பதாகப் பேசியதுடன் பொருளாதார நிலை, தொழிலாளர் பிரச்சினை ஆகியவைகளைப்பற்றியும் சுமார் 2 மணி நேரம் பேசினார்.

செயலாளர் தோழர் எம். எஸ். பொன்னுச்சாமி அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இரவு 9-15 மணிக்கு இனிது முடிந்தது. (வீ—உ)

சிம்ம சொப்பனம்!

"கம்யூனிசத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்; ஆனால் கம்யூனிஸ்டுகளின் பலாத்காரச் செயல்களைத்தான் கண்டிக்கிறோம்" என்று அடிக்கடி பண்டித நேரு முதற்கொண்டு சாதாரண காங்கிரஸ்காரர் வரையில் சொல்லுவதுண்டு. ஆனால் காங்கிரஸ் ஆட்சியாளர் செய்யும் ஆர்ப்பாட்டங்களைப் பார்த்தால் காங்கிரஸ் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறது என்ற உண்மை தெரியவரும்.

காங்கிரஸ்காரர்களுக்கு உண்மையிலேயே கம்யூனிசத்திடம் வெறுப்பில்லை என்றால் கம்யூனிஸ்டு தலைவர்களைப்பற்றி அடிக்கடி சிம்ம சொப்பனம் காணவேண்டியதில்லை. ஆனால் காங்கிரஸ் சர்க்கார் கம்யூனிஸ்டு தலைவர்கள் என்றாலே,' விடாதே பிடி! அல்லதுவிரட்டு வெளியே!" என்கின்றனர்.

கம்யூனிஸ்டு தலைவர் தோழர் ஏ. எஸ். டாங்கே அவர்களின் மனைவி தொழிபர் உஷாபாய் டாங்கே பம்பாயில் நாஸிக் என்னும் ஊரில் வசித்து வருபவர். அவரை 24-மணி நேரத்துக்குள் அவ்வூரைவிட்டே வெளியேற வேண்டும் என்று நாஸிக் ஜில்லா மாஜிஸ்டிரேட் அண்மையில் உத்தரவிட்டிருக்கிறார். ஏனெனில் அவர் பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளையும்படி நடந்து கொண்டாராம். ஆனால் அம்மையாரை இதற்குக் காரணம் கேட்டால், தனது குமாரிக்கு உடல்நலமின்மையால் தான்நாஸிக்கில் தங்கநேரிட்டது என்கின்றனராம். இப்படிப்பட்ட அம்மையாரை அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர் என்று குற்றம் சாட்டும் அளவுக்கு பம்பாய் சர்க்காரிடம் பயம் குடிகொண்டிருக்கிறது.

சர்க்கரை சப்ளை

சென்னை மாகாணத்துக்கு இத்த முதல் டிசம்பர் இறுதிவரை 7,150 டன் சர்க்கரை சப்ளை கிடைக்குமென உத்தியோக வட்டாரங்களில் கூறிக்கொள்ளப்படுகிறது.

வடஇந்தியத் தொழிற்சாலைகளினின்றும் இப்போது 1,600 டன் வரை இம்மாகாணத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டதாம்.

காமராஜர் கேள்வி!

"தென்னிந்தியரின் தொல்லைகளுக்கெல்லாம் காரணம் வடநாட்டவர் என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் இலங்கையிலுள்ள தென்னிந்தியர் படும தொல்லைக்கு யார் காரணம்?" என்று வெகு சாமர்த்தியமாகக் கேட்டிட்டதாகக் கருதிக் கொண்டு தோழர் காமராஜர் [illegible] யொன்று போட்டிருக்கி[illegible].

இங்கில்லாத வளமொன்றில்லை யெனக் கூறுந் தகைமையில் திராவிடம் சிறப்புற்றிருக்கவும் இந்நாட்டு மக்கள் அயல் நாடு தேடுகிறார்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளவென்றால், என்ன பொருள்? அந்நியர் ஆதிக்கம் வலுத்து, அயலார் சுரண்டல் பெருகிவிட்டது என்பது தானே. இந்நாட்டுக்குரியவன் ஏக்கமுற்றலைகிறான் அயல் நாடுகளில்; மார்வாரி, குஜராத்தி, முல்தானி, சேட் ஜிகள் திண்டு, தலையணை போட்டுக் கொண்டு ஏழையரின் இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டிருக்கின்றனர் இங்கு. இவர்கள் 'சிம்பி'க் கொண்டு எலும்புக் கூடாகவிட்ட மனிதர்களே இன்று இலங்கை போன்ற நாடுகளில் தத்தளிக்கின்றனர். எனவே காமராஜர் உணரட்டும். இந்நாட்டவனை இலங்கை ரப்பர் தோட்டத்துக்கு விரட்டியதே வடநாட்டு ஏகாதிபத்தியந்தான் இன்று திராவிடனை மேலும் மேலும் பல துறைக[ளில்] முன்னேற விட[ாமல்] அழுத்தி வைத்து வரு[கிற] அதே ஏகாதிபத்திய[ம்]. காமராஜரிடம் கருத்து [வேறு]பாட்டைத்தான் எதிர்பார்த்தோம், கருத்திழைப்பையல்ல.

அறிக்கை

"மாலை மணி" பத்திரிகை வேண்டிய அன்பர்கள் கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து [பெற்]றுக்கொள்ள வேண்டுகிறோம்

சோல் ஏஜண்ட்
(திருநெல்வேலி வட்டாரம்)
ஸ்ரீ ஆழ்வார் தாஸ்
பாளையங்கோட்டை.

சப் ஏஜண்ட்டுகள்

1. திருநெல்வேலி ஜங்ஷன் & தச்சநல்லூர்,
A C நல்லசிவன் புத்தகமண்டலம்
திருநெல்வேலி ஜங்ஷன்
2. திருநெல்வேலி டவுன்
தீ. பெ. நாராயணன்
நியூஸ் ஏஜண்ட், டவுன.
3. பேட்டை
T. P. M. முஹைதீன்
நியூஸ் ஏஜண்ட்.
4. மேலபாளையம்
M. முருகாண்டி செட்டியார்
5. பாளையங்கோட்டை
ஸ்ரீ ஆழ்வார் நியூஸ்மார்ட்
தெற்குபஜார், பாளையங்கோட்டை,

மானேஜர், "மாலை மணி"

தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள்

கல்லூரணி

கல்லூரணி, நவ. 3—

கல்லூரணி திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா 2—11—49 இரவு 7 மணிக்கு ஆரம்பமானது. தோழர் வி. அருணாசலம் முன்மொழிய தோழர் வா. ச. நடராசன் வழிமொழிய, தஞ்சை திராவிடர் முன்னேற்றக் கழக நிர்வாக உறுப்பினர் திரு. எம். எம். நடராசன் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

பின் கே. டி. வி. அழகர்சாமி என்பவரால் நாட்டுப் பண் பாடப்பட்டது. தோழர் வா. ச. நடராசன் அவர்கள், எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்கள். தலைவர் தனது முன்னுரையில், தான் திராவிடர் கழகத்திலிருந்து சுமார் பத்து ஆண்டுகள் தொண்டாற்றி வந்ததாகவும், பெரியாரின் பொருந்தாத் திருமணங்கண்டு கழகத்தைவிட்டு விலகி நின்றதாகவும், பின் தோழர் அண்ணாத்துரை ஆரம்பித்த முன்னேற்றக் கழகத்தில் தற்போது பணி புரிவதாகவும், எல்லோரும் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணி புரியும்படி கேட்டுக்கொண்டார்.

அடுத்தபடியாக, இராமநாதபுர மாவட்ட முன்னேற்றக் கழக அமைப்பாளர் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்டதின் அவசியம், அதன் அமைப்பு, வேலைத்திட்டம், தற்போதிய அரசியல் என்பதுபற்றி சுமார் 2½ மணி நேரம் பேசினார்கள். கேள்விகள் கேட்கப்பட்டு அக்கேள்விகளுக்கு ஆணித்தரமாகப் பதிலளித்தார். கடைசியாக அனைவரும் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து, பணியாற்ற முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, தன் நீண்ட சொற்பொழிவை முடித்தார்.

இறுதியாகச் செயலாளரால் நன்றி கூறப்பட்டுக் கூட்டம் 10-30 மணிக்கு இனிது கலைந்தது. (வி-உ)

வேட்டைக்காரன்புதூர்

வேட்டைக்காரன்புதூர் நவ. 7-

6—11—49ம் நாள் இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்க விழாவைத் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் மாலை 6-30மணிக்கு துவக்கிவைத்தார். பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் முன்மொழிய, தோழர் அண்ணாத்துரை பின்மொழிய, தோழர் தம்பி அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் இருவர் நாட்டுப்பண்பாடக் கூட்டம் துவங்கியது. தோழர் அண்ணாத்துரையின் சொற்பொழிவைக் கேட்க மக்கள் திரள் திரளாகக் குழுமியிருந்தார்கள். இந்தக் கூட்டத்தைப்போல் இதுவரை எந்தக் கூட்டத்திற்கும் கூடியதில்லை. தலைவர் முன்னுரையாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிக்கூறிவிட்டு, அண்ணாவைப்பற்றியும், தோழர்பழனிச்சாமி அவர்களைப் பற்றியும் பொது மக்களுக்கு எடுத்துரைத்தார். காலத்திற்கு ஏற்ற கருத்தைக் கொள்ள வேண்டுமென்று பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு, தோழர் பழனிச்சாமி அவர்களைப்பேசும்படி கேட்டுக்கொண்டார். தோழர் பழனிச்சாமி சிறிது நேரம் பேசிய பிறகு, அண்ணாத்துரை அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார். தோழர் அண்ணாத்துரை பேச எழுந்ததும் மக்கள் மகிழ்ச்சியின் காரணமாகக் கை தட்டினார்கள். தோழர் அண்ணாத்துரை தன் சொற்பொழிவில் திராவிட நாடு பிரிவினைக்கு முக்கிய காரணங்களை விளக்கிக்காட்டி, அதனால் விளையும் நன்மைகளையும், விரிவாக எடுத்து விளக்கினார். மக்கள் எல்லாக் கட்சியினர் சொல்வதை அறிவுக் கண்கொண்டு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பின்னர் செயலாளர் நன்றி தெரிவிக்கக் கூட்டம் இனிது கலைந்தது. (வி-உ)

அனந்தபூர்

அனந்தபூர், நவ 8—

அனந்தபூர் பீஸ் மிமோரியல் மண்டபத்திற்கு அருகில், 7—11—49 திங்கள் மாலை 5-30 மணிக்கு, தி. மு. க. தோழர்களின் கூட்டமொன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் பி. ராஜகோபால் இயக்கப் பாடல்கள் பாடினார். தோழர் தானியேல் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக்கூறி தோழர் எ. சி. ஸ்ரீராமுலு அவர்களைத் தலைமைவகிக்குமாறுபணித்தார். அடுத்து தோழர்கள் எம். என். ராகின், என். வி. குமாரசாமி, ஈரோடு ஜெயராஜ் ஆகியோர் புரட்சிகளைப் பற்றியும், தி. மு. க. தோற்றத்தைக் குறித்தும் விரிவாகப் பேசினர். கடைசியாக— வடசென்னை தோழர் பி. வி. முத்துசாமி அவர்கள் தி. மு. க செயல்முறை திட்டங்கள் பற்றியும், ஆட்சியாளர்களின் ஊழல்களை எடுத்துக்காட்டியும், நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தியும் பேசினதோடு, பெரியாரின் பொருந்தாமணம் நம்மை அவர் தலைமையிலிருந்து விலக்கிவைத்தது என்றும் அம்-அவர் நமக்கு வகுத்துத் தந்துள்ள பகுத்தறிவுப் பாதையில் தான் நடந்துசெல்வோம் என்பதைப் பல மேற்கோள்களோடு விளக்கியும் 1-30 மணிநேரம் உணர்ச்சி ததும்ப தெளிவுரையாற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. என்று அமைப்பாளர் தோழர் டி. தாணியல் அறிவிக்கிறார்.

சோழநகர்

சோழநகர், நவ. 8—

நேற்று மாலை இவ்வூர் நகரப் பூங்காவில் திராவிட முன்னேற்றக்கழகத் துவக்க விழா தோழர் தமிழரசன் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மக்கள் கடல்போல் திரண்டு வந்து மாநாடுபோல் காட்சி தந்தனர்.

இவ்வூர் கழகக் கட்டிடத்திலிருந்து தோழர்கள் பி. எஸ். இளங்கோ, இரா. இளமதி, கூட்டத் தலைவர் தமிழரசன் இவர்களை காரில் ஊர்வலமாக அழைத்துச்சென்று 6 மணிக்கு நகரப் பூங்காவில் ஊர்வலம் முடிந்தபின்னர், தமிழரசன் தலைமைதாங்கி முன்னுரை ஆற்றிய பின்பு தோழர் இளமதி 1 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

அடுத்துப் பாலூர் தோழர் பி. எஸ். இளங்கோ, விரிவாக ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்:—"நேற்றுவரை திராவிடர் கழகத் தோழர்களாகக் காட்சியளித்த நாம், இன்று திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களாகத் திகழ்கிறோம்.

பெண்ணடிமையை ஒழித்திடவும் பொருந்தாமணத்தைப் போக்கிடவும், அரும்பாடுபட்ட நம் தலைவர், பொருந்தாமணம் அருந்தாபானம் என்பதை உணர்ந்த பெரியார் அது எனக்கல்ல ஊருக்கு உபதேசம் என்பது போல், தம் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டுப் பகுத்தறிவைப் பாழ்படுத்தினர், மணியம்மையை மணம் செய்து கொண்டதன் மூலம்.

தவறு செய்த தலைவரின் தலைமையில் பணியாற்ற முடியாத நிலையில் உள்ள நாம் பிரிந்தோம், மகிழ்ச்சியோடல்ல மனமுடைந்து. கொள்கையை நாட்டில் பரப்ப தனிக்கழகம் அமைத்துக்கொண்டோம். திராவிடர் கழகத்திற்குப் போட்டிக்கழகம் ஏற்பட்டு விட்டதென, இனி நம்மை அசைக்க முடியாதென மாற்றுக்கட்சித் தோழர்கள் மனப்பால் குடிக்க வேண்டாம். திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது போர் முனை. திராவிடர் கழகம், முன்னேற்றக் கழகம் என்ற இரு போர் முனைகளிலிருந்து அணிவகுத்துச் செல்லும் போர்வீரர்கள் சனாதனிகளுக்குச் சாவுமணி அடித்து வைதீகக் கோட்டைகளைத் தான் தகர்ப்பார்கள் என்பதை நன்குணர வேண்டும். வெள்ளையர்களை வெளியேற்றிய பின்பு வடநாட்டுக் கொள்ளையர்கள் எங்களைக் கொள்ளையடிப்பதா? வேண்டாம் உங்கள் உறவு வெளியேறுங்கள் என வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு தாக்கீது அனுப்புவோம். முன்னேற்றக் கழகம் முற்போக்கான திட்டங்களைக் கொண்டு போரிடும். பாதை வேறு, குறிக்கோள் வேறல்ல!

'உணவுஉற்பத்தியைப்பெருக்க, ஒருநாள் ஒருபோது உபவாசம் இரு' இது ஊராள்வோர் உணர்த்திடும் உபதேசம். வடநாட்டு அதிகளுக்குச் சல்லாப வாழ்வு இங்கே, இது ஏன்? என்று கேட்டு நாடு நலிவுறுவதைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டினர். (வி-உ)

பெயரிடல்

சென்னை, நவ. 12—

சென்னைத் தோழர் ஓவியர் எஸ். வி. கணேசன் அவர்களின் துணைவியார் தோழியர் சண்பகவல்லிக்கு 24—9—49ல் பிறந்த பெண் மகவுக்கு 'சித்ரா' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப் பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

• • •

மாயவரம், நவ. 2—

இவ்வூர் தி. மு. க. உறுப்பினர் தோழர் வை. மாணிக்கம் அவர்களின் துணைவியார் தோழியர் செயலட்சுமிக்கு 13—7—49ல் பிறந்த ஆண்மகவுக்கு "சவுந்தரபாண்டியன்" எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப் பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

நாட்டு நடப்பு

தமிழ்ப் பேரவை

திருச்சி, நவ. 8—

அர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சிறப்புக்கூட்டம் 5-11-49 அன்று பேராசிரியர் ரம்போலாமாஸ்கரேஸ் எம். ஏ., தலைமையில் கூடியது. அதுபோது தமிழாசிரியர் தோழர் கோவை இளஞ்சேரன் அவர்கள் "நாகரிக மாற்றம்" என்ற பொருள் குறித்து சொற்பொழிவாற்றினர். பின் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. (ஓ கி)

• • •

குடியிருப்போர் சங்க மாநாடு

சென்னை, நவ. 9—

சென்னை குடியிருப்போர் சங்கத்தின் மூன்றுவது மாநாடு 5-11-49-ல் தோழர் எஸ் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் செயின்ட் பீர்க் சர்ச்சில் நடைபெற்றது. தோழர் பரமானந்தம் ஆண்டறிக்கை படித்தார். பிறகு வரவேற்புக் குழுத்தலைவர் தோழர் வி. பி. முருகையன் பேசுகையில் சுமார் 3 லட்சம் மக்கள் சேரிகளில் வீடுகள் இன்றி தவிப்பதாகவும், அரசாங்கம் ஷெனாய் நகரையும், சாந்திநகரையும் கட்டுகிறதே ஒழிய, ஏழைகளுக்கு வீடுகட்டவில்லையென்றும் குறிப்பிட்டார். தோழர் சந்தோஷம் மாநாட்டைத் திறந்து வைக்கையில், கார்பரேஷன் கவுன்சிலில் உள்ள ஏதேனும் ஒரு கட்சி, வீடு கட்டும் விஷயத்தில் கவனம் செலுத்தி, திட்டம் கொண்டுவர வேண்டுமென்று கூறினார். தலைவர் தம் சொற்பொழிவில் தரிசு நிலங்களிலும், மற்ற இடங்களிலும் குடிசைக்கட்டிக் கொண்டு வசிக்கும் பலரை அரசாங்கமும் நகரசபையாரும், அந்நில உரிமையாளரும் வெளியேற்றி வருவதைத் தடுக்க உடனடியாக அரசாங்கம் ஓர் அவசரச்சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று குறிப்பிட்டார். தோழர் சி. வி. இராசகோபாலனார் பேசும் பொழுது, வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் வீட்டுச் சொந்தக்காரர் நலனுக்கே ஏற்பட்டதென்றும், ஏழைகளுக்கு அதனால் நன்றும் நலனில்லையென்றும் பேசினார். குறைந்த அளவு அரை லட்சம் வீடுகளாவது சென்னையில் கட்டப்படவேண்டும் என்று தோழர் கே. ஜி. சிவசாமி கூறினார். தோழர் துரைராஜூ ஏழைகளுக்கு வீடுகட்டும் பொருட்டு ஓர் பாங்கி நிறுவவேண்டுமென்று பேசினார். பின்பு சங்கச்செயலாளர் தோழர் வி. எஸ். நாதன் நன்றி கூற, மாநாடு முடிவுற்றது.

* * *

சென்னை நகர் பற்றி திருவள்ளுவர் கழகத் தீர்மானம்

சென்னை, நவ. 9—

புரசை திருவள்ளுவர் கழகத்தின் சார்பாக தோழர் ஏ. கே. பரந்தாமனார் எம். ஏ அவர்கள் தலைமையில் 6—11—49ல் நடைபெற்றக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானம்:— சில ஆந்திரர்கள் சென்னையைத் தமிழ்நாட்டிலிருந்து பிரிக்கும்படி எழுப்பும் கூச்சலை சென்னைத் திருவள்ளுவர் கழகம் மறுக்கிறது. வடக்கே வேங்கடம் முதல் தெற்கே குமரிவரை எல்லையை நிர்ணயித்து, தமிழ் மாகாணத்தை நிறுவுமாறு மேலிடத்தாரை இக்கழகம் கேட்டுக் கொள்கிறது.

• • •

சென்னைத் தமிழாசிரியர் கழகம்

சென்னை, நவ. 11—

"சென்னையிலுள்ள தமிழாசிரியர்களின் குறைகளை நேரிற் சென்று கேட்டறிய, தமிழாசிரியர் குழுவொன்று இப்போது வேலைசெய்து வருவதால், தமிழாசிரியர் வாரம் கொண்டாடவேண்டிய அறிக்கை இதழ் அனுப்புவதற்குச் சிறிது காலம் பிடிக்கும். அன்பர்கள் சிறிது பொறுத்திருக்குமாறு வேண்டப்படுகின்றனர்" எனச் செயலாளர் எஸ். விசுவநாதன் வரைகிறார்.

* * *

பஞ்சாயத்துபோர்டு தேர்தலில் காங்கிரஸ்காரருக்குந் தோல்வி

ஆரணி, நவ. 10—

9—11—49ல் நடைபெற்ற இவ்வூர் பஞ்சாயத்துபோர்டு உபதலைவர் தேர்தலில் காங்கிரஸ் சார்பாக நின்ற தோழர் சீனுவாச (உடையார்) தோல்வியுற்றார். சுயேச்சை அங்கத்தினர் தோழர் பி. டி. முருகேசனார் அதிக வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார். (ஓ கி)

* * *

தி. மு. இளைஞர் படிப்பகம்

விருகம்பாக்கம், நவ. 10—

இவ்வூரில் புதிதாக 1[illegible]-10-49ல் திறவப்பட்ட திராவிட முன்னேற்ற இளைஞர் படிப்பகத்திற்கு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:-சி. நெடுமாறன், துணைசெயலாளர்:-மணியம், பொருள் உறுப்பினர்:-கு. சிவப்பிரகாசம், விளம்பர உறுப்பினர்:-தி. ச. மன்னர்மணி. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:-கோதண்டம், இந்திரவேல், சதீசன், அறிவழகன், சண்முகம், மோகனகுமார், சோமசுந்தரம், கலைபாண்டியம், சிவலிங்கம். (வி—உ)

• • •

இறப்பிலும் இணைபிரியா தம்பதிகள்!

நிலக்கோட்டை, நவ. 10—

இவ்வூர் தோழர் கே. ஏ. காளியப்பன் தம்பதிகள் இருவரும் சேர்ந்தாற்போல், ஒரே சமயத்தில் 6-11-49 அன்று இயற்கை யெய்தினர். வியப்புக்கும், அனுதாபத்திற்குமுரிய இந்நிகழ்ச்சி குறித்து திராவிட மறுமலர்ச்சிக்கழக சார்பாக 8-11-49ல் தோழர் டபுள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

• * *

வாலிபர் சங்கக் கூட்டம்

புதுக்கிராமம், நவ. 12—

கடையநல்லூரைச் சேர்ந்த புதுக்கிராம வாலிபர் சங்கக் கூட்டம் 4-11-49-ல் தோழர் வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. சண்முகம், ஆ. திராவிடமணி ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத் திட்டங்களை விளக்கிப் பேசினர். பின்பு செயலாளர் தோழர் இராமசாமி நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. (செ-ர்)

* * *

கிராம முன்னேற்றக் கழகம்

லிங்கம்பட்டி, நவ. 11—

கோவில்பட்டிக்கடுத்தலிங்கம்பட்டியில் 9-11-49-ல் தோழர் அருணாசலம் தலைமையில் நடந்தகூட்டத்தில் கிராமமுன்னேற்றக் கழகம் என்பதாக ஒன்று நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. தலைவர் சூசை, துணைத்தலைவர்:-க. இன்னாசி, செயலாளர்கள்:-கா. வெள்ளைச்சாமி, மூ. தனிஸ்லாஸ், பொருளாளர்கள்:-பா. இன்னாசி, அ. பாக்கியம், பொதுச்செயலாளர்:-சி. வே. பா. முத்துசாமி. ஏனைய உறுப்பினர்கள்:-ஏ. அந்தோனிமுத்து, இ. மரியமணி, அ. சவரிமுத்து, மூ. பால்லையா, வெ. செல்லையா. (செ-ர்)

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.